©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 26, 2011
ஐப்பசி 9, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 23/2011.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,– 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) (6)–ஆம் கூறானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

(ii) (16)–ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

“(16–A) “துணை வணிகவரி அலுவலர்” என்றால், ஆணையரால் பெயர் குறிப்பிடப்பட்டோ அல்லது அவருடைய பதவியின் காரணமாகவோ, துணை வணிகவரி அலுவலர் ஒருவரின், அதிகாரங்களைச் செலுத்துவதற்கு நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்.”.

**3.** முதன்மைச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், “உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “துணை வணிகவரி அலுவலர்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

64–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 64–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், ‘‘உதவி வணிகவரி அலுவலர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணை வணிகவரி அலுவலர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

81–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின், 81–ஆம் பிரிவில்,–

(i) (1)–ஆம் உட்பிரிவில் ‘‘உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணை வணிகவரி அலுவலர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (3)–ஆம் உட்பிரிவில் ‘‘உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணை வணிகவரி அலுவலர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

82–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 82–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ‘‘உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணை வணிகவரி அலுவலர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.